"விடுதலை" நாளிதழ் [மூன்று பணமாக]

சந்தா விகிதம் [தபால் செலவு உள்பட]

	ரூ. காசு.
3 மாதம்	2—15
6 மாதம்	6—25
9 மாதம்	12—00
ஆண்டு	24—00

வெளிநாடு ஆண்டு 80—00

திராவிடநாடு திராவிடருக்கே

விடுதலை

VIDUTHALAI ESTD: 1935

திராவிடர் தமிழ்த் தினசரி

REGD·NO: M. 4789 Phone No: 86977.

123

பெரியார் பொன்மொழி

"இந்நாட்டில் பணக்காரன் என்றும் ஏழை என்றும் இரு பிரிவுகள் இருக்கக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? இதற்கும் முன்ஜென்மம் பின் ஜென்மப்பித்தலாட்டந்தான் காரணம். பாபம் புண்ணியம் என்ற பித்தலாட்டமுந்தான் காரணம். ஏழையும் பிச்சைக்காரனும் தன் ஏழ்மைத்தன்மையை நினைத்து ஒப்புக் கொண்டு பொறுத்துக் கொண்டிருப்பதுதான் காரணம்."

பக்கம் 21 விலை ஒரு மாசி மீ 28உ (11—3—60) வெள்ளி — வெளியூர் விகாரி ஐ மாசி மீ 29 உ (12—3—60) சனி விலை 7 காசுகள் | இதழ் 278

புதியவரிகளில்லா சென்னை அரசின் 1960-61-ம் ஆண்டு 'பட்ஜெட்'

அழுகும் பொருள்களுக்கு விற்பனைவரியிலிருந்து விலக்கு

கல்வித்துறைக்கு ரூ. 15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறுதொகையே துண்டுவிழுகிறது

ரூ. 10 கோடி கடன் எழுப்பப்படும்

சென்னை, மார்ச் 11—

சென்னை அரசாங்கத்தின 1960—61ம் ஆண்டின்வரவு செலவுத் திட்டம் நேற்று சென்னை சட்டமன்றத்தில் நிதியமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்களால் அளிக்கப்பட்டது. அதில் ரூ. 83.65 லட்சம் துண்டுவிழுகிறது ஆனால் இதை ஈடுகட்ட புதுவரி எதுவும் விதிக்க உத்தேசம் எதையும் நிதியமைச்சர் வெளியிடவில்லை.

சம்பளக் கமிஷன் பொறுக்கட்டி கூடுதலாக செலவு செய்ய நேர்ந்தால் துண்டுவிழும் தொகை அதிகரிக்கக்கூடாது என்றும் நிதியமைச்சர் குறிப்பாக தெரிவித்தார்.

காய்கறிகள், உருளைக்கிழங்கு பழங்கள், வெற்றிலை வாழை இலை, பூக்கள், முட்டை, மீன் முதலிய அழுகும் பொருள்கள் மீதுள்ள விற்பனை வரிக்கும் உள்நாட்டுச் செக்குஎண்ணெய், தேயிலைப் பங்குனழைக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பது என்று அரசாங்கத்தின் முடிவை நிதியமைச்சர் அறிவித்தார்.

முதலீட்டுச் செலவினங்களுக்காகவும் அடித்த ஆண்டு இதர செலவுகளுக்காகவும் அரசாங்கம் ரூ. 10 கோடிக்கு மொத்தகடன் எழுப்ப எண்ணியிருப்பதாக அமைச்சர் அறிவித்தார்.

நடப்பு ஆண்டுப் பட்ஜெட்டில் ரூ. 139 லட்சம் உபரி எதிர்பார்க்கப்பட்டது; திருத்தப்பட்ட நிலுவைத்தொகை உபரி ரூ 58 லட்சந்தான்

1960-61-ம் ஆண்டில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானம் ரூ 80 87 கோடி; செலவு ரூ 81-21 கோடி.

1960-61-ம் ஆண்டின் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூ கடை முறை ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டை காட்டிலும் வரக்கூடிய நிகர அதிகரிப்பு ரூ. 257 லட்சம் தரும் நிலம் எனமதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்புக்கு மூலகாரணம்.

மத்திய அரசாங்க வரிப்பங்கின் மூலமும் மோட்டார் வாகன வரியின் மூலமும் கிடைக்கவை அதிகரித்திருப்பதாகும். அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்படுள்ள திட்டங்களை முடிக்கச் செலவு ரூ. 1089 கோடி.மின்சார அபிவிருத்தி செலவினங்களுக்காக ரூ. 12.07 கோடி. வரை முதலீடு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது.

நீதியமைச்சர் திரு. சுப்ரமணியம் சட்டசபையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளையும் பலதுறைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கியுள்ள அளவையும் விளக்கிவிட்டு தன்னுரையை முடித்தார்.

நிதியமைச்சர் வரவு செலவுத் திட்டம்பற்றி தமிழில் உரை நிகழ்த்தினார். நிதியமைச்சரின் உரை முடிய ஒருமணியும் 20 நிமிடம் ஆயிற்று. அழுகும் பொருள்கள் மீது விற்பனைவரிச் சலுகை அளிக்கப்பட்டிருப்பது பற்றி அமைச்சர் குறிப்பிட்டதும் பெருத்த ஆரவாரம் செய்து வரவேற்றார்கள்

பட்ஜெட் மீதுபொது விவாதம் மார்ச் 11 முதல் 17 முடிய (மார்ச் 18ம் தேதி சனிக்கிழமைதவிர்த்த) ஆறுநாட்களுக்கு நடைபெறும் மார்ச் 17ம் தேதி காலைக்கு மீது ஒட்டு எடுக்கப்படும். 18ம் தேதி உபரி செலவுபற்றி உப அறிக்கை வெளியிடப்படும். இதற்கு மார்ச் 28ம் தேதி விவாதிக்கப்படும்.

மார்ச் 18 முதல் 25ம் தேதி முடிய மானிய கோரிக்கைகள் மீது வாக்கு எடுக்கப்படும். அதன்பின் இடைக்கூட்டம் முடிந்து. மீண்டும் ஏப்ரல் முதல்வாரத்தில் கூடும். இந்நிகழ்ச்சி விவரத்தை அவைத் தலைவர் அறிவித்திருக்கிறார்.

தமிழ் நாடு பட்ஜெட்

1960—61 ஆண்டுக்கு நிதி நிலைமைக் குறிப்பேடு

	ரூ. லட்சம்.
நிகர வரவு	8037
நிகர செலவு	8121
துண்டுவிழும் தொகை	34

புதிய வரி விதிப்பு இல்லை

காய்கறி, பூ, முட்டை, மீன், இறைச்சி, செக்குத்தண்ணெய் சுங்கத்தீர்வையிலைக்கு விற்பனை வரி நீக்குகிறது.

கிராமசபை முன்னேற்றம்

1959—60ம் ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் 5 கிராமசபைகளுக்கு முன்னோடி மேற்கொள்ளப்பட்டது. வேலைஞ்ஞ கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவற்றுடன், 1960—61ல் சாலை முன்னேற்றப்பணிகள் கல்விச்சாலைகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். அடுத்தாண்டு பெருவழியே அல்லது ரயில் நிலைபதிலோ இரண்டு சேரக்கும் முறையில் இந்த சாலைகள் அமைக்கப்படும்.

இதற்காக மத்திய அரசாங்கம் தனது வரவுசெலவுத் திட்டத்தில் ரூ 3 கோடி ஒதுக்கியுள்ளனர்

அதில் சென்னையின் பங்காக ரூ 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாலில் அரினர் தனது பங்கை விரைவில் ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளனர். எனவே நடுய ஆண்டில் ரூ. 75 லட்சத்துக்கு மேல் மேற்றத் திட்டங்களை எடுக்க முடியும் என்று நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய எல்லாவசதிகளும் வேண்டும்; விவசாய உற்பத்தி பெருகினால்தான் பெரும் அளவில் தொழில் வளர்ச்சியும் ஏற்பட முடியும்; எனவே நாடுமுழுவதிலும் பெரிய மற்றும் சிறிய பாசனத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதன் மூலம் ஆண்டுக்கு 84 லட்சம் ஏக்கர் நிலம் பயிர்த்தொழில் செய்யப்படுவதாக ஆகும் என்று அமைச்சர் கூறினார்.

இதற்காக ரூ 74 லட்சமும் மேலும் விரிவாக்கத் திட்டங்களுக்கு ரூ 143 லட்சமும், விவசாயத்துக்கு ரூ 268 லட்சமும், தொழில்துறைக்கு ரூ 28 லட்சமும், மின்சாரத் தொழிலுக்கு ரூ 24 லட்சமும், போக்குவரத்து துறைக்கு ரூ 85 லட்சமும் மொத்தமாக வேலைவாய்ப்பு ரூ 120 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகர்னோவைக் கொல்ல மீண்டும் சதி?

பயிரழியில் உயிர் தப்பினார்

மாளிகைமீது விமானி குண்டுமாரி பொழிந்த கொடுமை

(முன் வந்த செய்தி)

ஜார்த்தர, மார்ச் 9—

இந்தோனேஷ்யாவின் படைச்சேர்ந்த போர் விமானி ஒருவர் தனது எம், ஐ 17 ஜெட் விமானத்தில் தலையகப் பகுதில் வந்த ஜகர்த்தாபோகர் என்ற இடங்களில் உள்ள ஜனாதிபதி சுகார்னாவின் அண்மனையின் மீது மேலே பறந்தண்ணமாகவே இருந்து சுட்டுக்கொண்டிருந்தார் எனும், மேலும் கடற்கரை பகுதியிலுள்ள அவரது ஓய்வுஸ்தலமாகிய ஒரு பிராமத்தின்மீதும் குண்டுகளைப் பொழிந்தாகவும் கூறப்படுகிறது

இந்த குண்டுவீச்சினால்ஜனாதிபதியோ அவரது குடும்பத்தினருக்கோ எவ்வித தீங்கும் ஏற்படவில்லையென தெரியவருகிறது

கடற்கரைப் பகுதியிலுள்ள திதிலந்தவிஞ்ச் என்ற கிராமத்தில் சுட்டதில் 14தொழிலாளர்கள் இறந்தனர் என்றும் ஜகர்த்தாவிலுள்ள ஜனாதிபதி அரண்மனையின்மீது வீசப்பட்ட குண்டு வீச்சினால், ஒரு காவலாளியும், தொழிலாளியும் காய்க்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

ஜகர்த்தர, மார்ச் 11...

இந்தோனேஷிய ஆகாயப் படையைச்சேர்ந்த விமானிஒருவர் ஒருஜெட் விமானத்தில் இந்தோனேஷியாத் தலைவர் சுகர்ணோவை பொகார் மாளிகைமீது பறந்தொண்டே மிஷன் துப்பாகியால் குண்டுமாரி பொழிந்ததாகச் செய்திவெளியாகியுள்ளது

குண்டுகள் தலைவரின் விருந்து மண்டபத்தில் சுமாரிபசய்துகொண்டிருந்தபோதுஎனவும் சுகர்னோ உயிர்தப்பினார்அவரது 5குழந்தைகளும்கூட காயமின்றித் தப்பினர் எனவும் ஆனால் மற்ற 16 பேர்கள் காயமுறனர் எனவும் இதுபற்றி இந்தோனேஷிய பெய்ரும் பாபரப்படைத்துள்ளனர்

இந்த விமானியின் தகப்பன் சட்டவிரோதமாய் வெடிகுண்டு வைத்திருந்ததாக ஒருமுறை தண்டிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

விமானிப்பிடிபற்று விட்டார் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்

விமானியின் வீழ்ச்சி

இந்தோனேஷியாவின் ஜனாதிபதி சுகர்னோவுக்குச் சொந்தமான மாளிகைமீதும் வெடிகுண்டு வீசிவிட்டு காடுகளில் ஒடி ஒளிந்த ஒரு விமானியை இந்தோனேஷியாமாவட்ட படையினர் பத்திவிட்டனர் 3 மற்றுமொரு விமானிக்கு வயது 28 இவர் ஒட்டிவந்த விமானம் ராஷ்யாவின் ஜெட் ரக விமானமாகும் இவர் சோவியத் நாட்டைச் சேர்ந்தது இவரை ராணுவ கோர்ட்டில் விசாரிக்க இருக்கிறார்கள் விமானம் மலைகளில் விக்கு எழுந்த மூலம் பதிலளிக்கப்பட்டதாக கூறினர்.

இந்தோனேஷியாவில் நடந்துவரும் தொடர்பு விவரம் தெரியவில்லை.

ஜில்லா போலீசு சூப்பரிண்டெண்ட் கொலை

சப் இன்ஸ்பெக்டர் துப்பாக்கியால் நேரே சுட்டுக்கொன்றார்

மற்றுமிருவர் படுகாயமுற்றனர்

பெங்களூர், மார்ச் 11—

ஷிமோகா ஜில்லா போலீசு சூபரிண்டெண்ட் திரு அய். சூர். ராய்சூர் எனபவர் தனது காரியாலயத்தில் ஒரு இராகா ஜூனியர் சம்பந்தமான விசாரணைநடத்திக் கொண்டிருக்கையில் ஒருடிராபிக் பிரிவு சப் இன்ஸ்பெக்டரால் சுட்டுக் கொல்லப்பட்டசெய்தி கிடைத்திருக்கிறது. அருக்கு வயது 53 அவருடன் கூடவிருந்த இன்ஸ்பெக்டர் திரு. சையது மான்ஜீரான்அவரும் காயல் செய்து வந்த கான்ஸ்டேபிள் ராமையாவும் குண்டுக்காயம் பட்டனர்.

படுகாய முற்ற இருவரும் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைகாகக எடுத்தச் செல்லப்பட்டனர் அவர்கள் நிலைமைசவலைக்கிடமாய் இருக்கிறதாம

சூப்பரிண்டெண்டை சுட்ட சப்இன்ஸ்பெக்டர் தப்பி ஓடாராயினும் பின்னால் தேவங்கிரியில் பிடிபட்டு கைதுசெய்யபட்டுள்ளார். இவர் சோரப நகரிலிருந்து இங்கு மாற்றப்பட்டவர் அங்கு வேலை ஒப்புக்கொடுகையில் முறைகேடாக நடந்ததற்காகவே இவர் மீது அந்து டி. எஸ். பி. விசாரணை நடத்திக் கொண்டிருந்தார். எதிர் கோர்டில் நுழைந்தவேளையே சுட்டதாக தலைக்கு மேற்கூட்டி இருமுறை சுட்டதடன் இன்ஸ்பெக்டர் மீதும் சுட்டார் உடனிருந்த சல்வி அதிகாரி ஹெல்மெட் தனது உடம்பை வெளித் தெரியாதபடி தொண்டு தாக்கமல தப்பித்துக் கொண்டாராம்,

போலீசு சமிஷனர் உயர்தர அதிகாரிகள்தலைத்துக்குவிரைந்து சென்ன புலன விசாரித்து வருகின்றனர்.

பெண்களை பலுதூக்கவிடும் பரிதாப நிலை

ரயில் நிலையங்களில் பெண் போர்ட்டர்கள்!

புதுடில்லி, மார்ச் 11—

ரயில் பிரயாணிகளிடம் பெட்டி படுக்கைகளை எடுத்துச் சென்று செல்ல போர்ட்டர்களாக பெண்களை செய்வதற்காக வடக்கு பிராந்திய, தெகிழக்குப் பிராந்திய மேற்கு பிராந்திய ரயில்வேக்களில் முறை 15 ஸ்டேஷன்களும் 146 ரயில் களுக்கும், 338 ஸ்டேஷன்களும் லகேஜ் வழங்கப்படுகிறது இது ரயில் நிலைய மத்திய துறையில் உள்ள தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போர்ட்டர்களுக்கு தெரிந்த தொழிலாளர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ரயில்வே அதிகாரிகளிடம் விடப்பட்டுள்ளது.

பட்டுவரும்டை முறைவிவரங்கள் பற்றி கேட்கப்பட்டதற்கு அவர் பதிலளிக்கையில், "ரயில்வே மாஸ்டர்கள் ஸ்டேஷன் பொறுப்பின் பேரில் பதிவு செய்துகொண்டுள்ளவர்களிடையிருந்து அவர்களால் இவர்கள் தெரிவாகத் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்" என்றும் "எனப்படுபர்" பதினாறு வயதுக்கு மேற்பட்டவராகவும் உடலுறுதியுள்ளவராகவும் இருக்கவேண்டுமென்றும் அவர் கூறினார்.

பாங்கி ஊழியர் கோரிக்கைகள்

விசாரணைக் கமிட்டி நியமிக்கப்படலாம்

பம்பாய், மார்ச் 10—

நாடுமுழுவதுமுள்ள பாங்கி ஊழியர்களி கோரிக்கைகளைக் குறித்து விசாரணை நடத்த ஒரு அமைப்பு தமிழ்ட நியமிப்பது குறித்து மத்திய அரசாங்கம் முயற்சித்துவருவதாகத் தெரிகிறது

தானே எடுத்துன்னும் சிற்றுண்டிச்சாலை

மதுரையில் துவக்கம்

மதுரை, மார்ச் 10—

தாமே எடுத்து உண்டுவிட்டு அதற்குரிய பணத்தை வாயிற் பகுதில் வைத்திருக்கும் கல்லாப் பெட்டியில் போட்டுவிட்டுச் செல்வதற்கான சிற்றுண்டிச் சாலையொன்று மார்ச் மாதமுவக் கத்திலிருந்து இங்கு நடைபெற்று வருகிறது.

டி. வி. எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இத் தகைய சிற்றுண்டிச் சாலையை நடத்துகிறார்கள். இந்த சிற்றுண்டிச் சாலையை அங்கிறுவனத்திலுள்ள ஒரு பிரிவைச் சேர்ந்த ஆயிரம் தொழிலாளர்களுக்குச் சிற்றுண்டி அளித்து வருகிறது.

இத்திட்டம் வெற்றிபெற்று நிரப்புதலவும் மற்ற இலாக்காகளிலும் இத்திட்டம் அமுலாக்கப்படுமென்றும் சங்கப் பொதுச் செயலாளர் திரு டி பொம்மையா கூறினார்.

தினசரி வார இதழ்
விடுதலை
தந்தை பெரியார்
திராவிடர் தமிழர்த் தினசரி

சென்னை | 11—3—60 | வெள்ளி

புதிய ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

தமிழ்நாடு அரசாங்கத்தின் புதிய ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர்கள் சட்டமன்றத்தில் வெளியிட்டிருக்கிறார்.

மத்திய ஆட்சியின் வரவு—செலவுத் திட்டத்தைப் போலவே இதிலும் குறிப்பிடத்தக்க பகுதி எதையும் காணமுடியவில்லை.

நேற்றல் நெருங்க நெருங்க, அரசாங்கம் பணக்காரர்மீதுள்ள வரிகளைக் கூடுதலாக்குவதற்கு நெருங்கிறது எனபதற்கு இந்த வரவு—செலவுத் திட்டமும் மற்றொரு சான்றாகும்.

நல்ல வருமானமுள்ள தொழில்களையாவது அரசாங்கம் ஏறக்க வேண்டும்; அல்லது பணவசதியுள்ளவர்களுக்குக் கூடுதலான வரியாவது விதிக்க வேண்டும். இரண்டுமில்லாமல் ஆட்சியை எப்படி நடத்த முடியும்? மக்களுக்கு எப்படிப் பல நன்மைகளைச் செய்ய முடியும்?

இந்த "பட்ஜெட்" மீது 5—6 நாட்களிலிருந்து நடைபெற்று வரும் விவாதத்தில் எழுந்தபோதிலும் சரி, சட்டசபைக்கு வெளியிலும் சரி, "அதற்கு ஒதுக்கப்பட்டதொகை போதாது; இதற்கு இன்னும் கூடுதலாக ஒதுக்கியிருக்கவேண்டும்," என்றெல்லாம் வாய்ப்பறை அடிப்பார்கள்! ஆனால் இன்ன இனங்களில் வரும் வருமானத்தைப் பெருக்கியிருக்க வேண்டும் என்றமட்டும் கூற மாட்டார்கள். ஏனென்றால், வோட்டர்களுக்குக் கோபம் வருமே!

இனி, "பட்ஜெட்" பற்றிக் கவனிப்போம். உத்தேச வருமானம், சுமார் 81 கோடியே 87 லட்சரூபாய். உத்தேசச் செலவு 81 கோடியே 20 லட்சரூபாய். அதாவது மிஞ்சுவதோகை, சுமார் 34 லட்சரூபாய்.

இந்த பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்கது நல்ல. ஏனெனில் மொத்த வருமானத்தில் அப்றில் ஒரு பங்கு, அதாவது 15 கோடியே 53 லட்சரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான மற்றத் தலைகளுக்குப் பின்வருமாறு ஒதுக்கப்பட்டிருக்கிறது :—

லட்சத்தில்

தொழில்களும், வழங்கு தலை சனுட (supplies)	489
மருத்துவம்	480
சமுதாயநலத்திட்டம்	331
விவசாயம்	312
தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்	295
பொதுச்சுகாதாரம்	208
கூட்டுறவு	188
கால்நடைவளர்ப்பு	111

கல்விக்காக அய்ந்தில் ஒரு பங்கு ஒதுக்கப்பட்ட போதிலும் டம் மாநிலத்திலுள்ள லைகள் குழந்தைகளுக்குப் போதிய இலவச கல்வி தரமுடிந்த நிலையில் இருப்பது வருந்தத்தக்கதேயாகும். எப்படியாவது வருமானத்தைப் பெருக்கி, இத்தகு இரண்டுகளுக்கும் ஆரம்பக்கல்வியை இலவசமாகவும் ஆக்கியே தீர வேண்டும். ஏனெனில் கல்வியில் வளர்ச்சியடைந்துவிட்டால், போலீஸ், நீதிமன்றம்—போன்ற மற்றத்துறைகளுக்கு வேலை குறையும்.

இனி, புதியவரவு-செலவுத்திட்டத்தில் அழுத்தம் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஓராண்டுக்கு மட்டுமே சோதனையாக இவ்வரி விதிக்கப்படுவதாக நம் முதலமைச்சர் அவர்கள் முதலில் கூறியபடியே இவ்வரியை நீக்கியிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். இதன் பலனாக, காய்கறி—பழம்—மூட்டை போன்ற அழுகும் பொருள்களின் விலைகளாவது மென்மை எதிர்பார்க்கிறோம்.

இனி, சம்பளக்குழுவின் அறிக்கை வெளிவராத காரணத்தினால் இதற்கான பணம் இந்தத் திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை. இந்தக்குழு உரிய காலத்தில் தன் பொறுப்புகளை வெளியிடாத காரணமென்ன என்று தெரியவில்லை. இக்குழுவினரின் சுறுசுறுப்பின்மைக்காகக் குழுவினரை கெட்டப்படுவார்களென்பது கருதுகிறோம். இக்குழுவின் ஆலோசனை வெளிவந்ததும் இடைமாநில என். ஜி. ஓ. க்கள், ஆசிரியர்கள் நாட்டாண்மைக்கழக ஊழியர்கள் — ஆகியோருக்குக் கூடுதல் ஊதியமாகக்கொடுக்க வேண்டிய தொகை சுமார்மூன்று கோடி ரூபாயாவது இருக்கு மென்று கருதுகிறோம். அப்படிக் கொடுத்தாலுங்கூட ஒரு போஸ்ட் மேன் சம்பளத்தில் பாதிகூட இடைநிலை பட்டதாரி ஊழியருக்குக்கிடைக்காது. ஆதலால் மத்திய ஆட்சியிடமிருந்து உதவி பெற்றாவது அந்த ஆட்சி ஊழியர்களுக்குச் சமானஊழியமாகவும் இடைநிலை ஆட்சி ஊழியர்களுக்கும் (அவரவர் பணிக்கும் பொறுப்புக்கும் ஏற்றபடி) தரவேண்டுமென்று மாநில ஆட்சித்தலைவர்களிடத்தும், ஆலோசித்துக் கொள்கிறோம்.

புதியநிதி ஆண்டுக்கு புதுவரி எதுவுமில்லைஎன்பதைக்கொண்டு மக்கள் திருப்தியடைய மாட்டார்கள் வரியில்லையென்றால், லாபகரமான தொழில்களை ஏற்றக் கொண்டாவது வருமானத்தைப் பெருக்கியிருக்க வேண்டாமா? இந்தமான திட்டம் ஒன்றுமேபிடிலையே ஏன்?

இனி, கேரளத்தின் உபரியான உறை நீரையும், ஆந்திராவின் அரி உபரியான ஆற்று நீரையும் தமிழ் நாட்டுக்குக கொண்டுவரக் கூடிய முயற்சியிற்றும் நிதி மைச்சர் குறிப்பிடாதிருக்கிறார். இந்த ஆட்சி நிலையாக நீடிப்பதற்கு இவைகளை ஏற்றுக்கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

இனி, கேரளத்தின் உபரியான உறை நீரையும், ஆந்திராவின் அரி உபரியான ஆற்று நீரையும் தமிழ் நாட்டுக்குக கொண்டுவரக் கூடிய முயற்சியிற்றும் நிதி மைச்சர் குறிப்பிடாதிருக்கிறார். இந்த ஆட்சி நிலையாக நீடிப்பதற்கு இவைகளை ஏற்றுக்கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

இனி, பதிவரவு-செலவுத்திட்டத்தில் அழுத்த பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்கியிருப்பது பற்றி குறிப்பிட்டதற்காக பதிவரவு-செலவுத் திட்டத்தைப் போலவே இதிலும் குறிப்பிடத்தக்க பகுதி எதையும் காணமுடியவில்லை.

நேற்றல் நெருங்க நெருங்க, அரசாங்கம் பணக்காரர்மீதுள்ள வரிகளைக் கூடுதலாக்குவதற்கு நெருங்கிறது எனபதற்கு இந்த வரவு—செலவுத் திட்டமும் மற்றொரு சான்றாகும்.

நல்ல வருமானமுள்ள தொழில்களையாவது அரசாங்கம் ஏறக்க வேண்டும்; அல்லது பணவசதியுள்ளவர்களுக்குக் கூடுதலான வரியாவது விதிக்க வேண்டும். இரண்டுமில்லாமல் ஆட்சியை எப்படி நடத்த முடியும்? மக்களுக்கு எப்படிப் பல நன்மைகளைச் செய்ய முடியும்?

இந்த "பட்ஜெட்" மீது 5—6 நாட்களிலிருந்து நடைபெற்று வரும் விவாதத்தில் எழுந்தபோதிலும் சரி, சட்டசபைக்கு வெளியிலும் சரி, "அதற்கு ஒதுக்கப்பட்டதொகை போதாது; இதற்கு இன்னும் கூடுதலாக ஒதுக்கியிருக்கவேண்டும்," என்றெல்லாம் வாய்ப்பறை அடிப்பார்கள்! ஆனால் இன்ன இனங்களில் வரும் வருமானத்தைப் பெருக்கியிருக்க வேண்டும் என்றமட்டும் கூற மாட்டார்கள். ஏனென்றால், வோட்டர்களுக்குக் கோபம் வருமே!

இனி, "பட்ஜெட்" பற்றிக் கவனிப்போம். உத்தேச வருமானம், சுமார் 81 கோடியே 87 லட்சரூபாய். உத்தேசச் செலவு 81 கோடியே 20 லட்சரூபாய். அதாவது மிஞ்சுவதோகை, சுமார் 34 லட்சரூபாய்.

இந்த பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்கது நல்ல. ஏனெனில் மொத்த வருமானத்தில் அப்றில் ஒரு பங்கு, அதாவது 15 கோடியே 53 லட்சரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான மற்றத் தலைகளுக்குப் பின்வருமாறு ஒதுக்கப்பட்டிருக்கிறது :—

லட்சத்தில்

தொழில்களும், வழங்கு தலை சனுட (supplies)	489
மருத்துவம்	480
சமுதாயநலத்திட்டம்	331
விவசாயம்	312
தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்	295
பொதுச்சுகாதாரம்	208
கூட்டுறவு	188
கால்நடைவளர்ப்பு	111

கல்விக்காக அய்ந்தில் ஒரு பங்கு ஒதுக்கப்பட்ட போதிலும் டம் மாநிலத்திலுள்ள லைகள் குழந்தைகளுக்குப் போதிய இலவச கல்வி தரமுடிந்த நிலையில் இருப்பது வருந்தத்தக்கதேயாகும். எப்படியாவது வருமானத்தைப் பெருக்கி, இத்தகு இரண்டுகளுக்கும் ஆரம்பக்கல்வியை இலவசமாகவும் ஆக்கியே தீர வேண்டும். ஏனெனில் கல்வியில் வளர்ச்சியடைந்துவிட்டால், போலீஸ், நீதிமன்றம்—போன்ற மற்றத்துறைகளுக்கு வேலை குறைய